DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.335/2005**

**P.W.1**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | கிருஷ்ணன் |
| Father Name | : | முப்பிடாதி |
| VILLAGE | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.12.2024.

(1, 6, 7 எதிரிகள் ஆஜர். 2, 4 எதிரிகள் இறந்துவிட்டனர். 3 மற்றும் 5 எதிரிகள் வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளனர் )

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>

நான் கடந்த 2014ம் ஆண்டு ஆகஸ்ட் 31ம் தேதியில் மதுரை மாநகர் நுண்ணறிவு பிரிவில் உதவி ஆணையர் பதவியிலிருந்து ஓய்வு பெற்று மதுரையில் வசிக்கிறேன். கடந்த 2001ம் ஆண்டு நான் திடீர் நகர் காவல் நிலைய காவல் ஆய்வாளராக பணிபுரிந்த சமயத்தில் பி7 காவல் நிலைய குற்ற எண்.816/2001 சட்டப்பிரிவுகள் 143, 341, 188 இதச உ/இ 7(1A) CLA Act வழக்கு எதிரிகளான மாறன், செல்வம், நேரு, பர்மா கண்ணன், பிச்சை, கணேசன், கோபாலகிருஷ்ணன் ஆகியோர்களை கைது செய்து கனம் நீதித்துறை நடுவர் எண்.6, மதுரை அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த 30.06.2001ம் தேதி 14.15 மணிக்கு நான் எனது காவல் நிலைய சார்பு ஆய்வாளர்கள் **சாட்சி எண்.3** நெல்சன், சுந்தர்ராஜ் மற்றும் போலிஸ் பார்ட்டியுடன் நீதிமன்றத்திற்கு வந்த போது, திடீரென்று மேற்கண்ட எதிரிகள் அருகில் கிடந்த கற்களை எடுத்து எறிந்ததில் நீதிமன்ற ஜன்னல் கண்ணாடி உடைந்தது. நானும் எங்கள் போலிஸ் பார்ட்டி

மற்றும் பாதுகாப்பில் இருந்த காவல் ஆய்வாளர் **சாட்சி எண்.1** வானமாமலை ஆகியோர்களும் மேற்படி எதிரிகளை கட்டுப்படுத்த முயற்சித்த போது எங்களை பணி செய்யவிடாமல் தடுத்தும் காவல் ஆய்வாளர் வானமாமலையை கையால் தாக்கியும் 4 வது எதிரி பர்மா கண்ணன் கல்லால் எறிந்ததில் காவல் ஆய்வாளர் வானமாமலையின் வலது காது பக்கம் ரத்தக்காயம் ஏற்பட்டது. இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**1, 6 மற்றும் 7 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–**

திராவிட முன்னேற்ற கழக தலைவர் காலஞ்சென்ற திரு.கருணாநிதி அவர்கள் வழக்கு சம்பவத்திற்கு முந்தைய நாள் இரவு கைது செய்யப்பட்டது தெரியும், ஆனால் அது வழக்கு சம்பவத்திற்கு முந்தைய நாளா என்று வழக்கு கோப்பை பார்த்தால் தான் தெரியும். மேற்படி காலஞ்சென்ற திரு.கருணாநிதி அவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதால் தி.மு.க கட்சி சம்பந்தப்பட்டவர்கள் கலவரம், தர்ணா, மறியல் ஆகியவற்றில் ஈடுபட வாய்ப்பு உண்டு என்றும், அதனை தடுக்கும் வகையில் எச்சரிக்கையாக இருக்கும்படி காவல்துறை தலைமையிடத்திலிருந்து காவல்துறைக்கு உத்தரவு வந்ததா என்றால் மதுரை காவல்துறை காவல் ஆணையாளர் அவர்கள் எங்களுக்கு எச்சரிக்கையாக இருக்கும்படி அறிவுறுத்தல் வழங்கினார். நான் சம்பவ காலத்தில் பி7 திடீர் நகர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தேன். ஆஜர் எதிரிகள் மறியல் செய்ததால் நான் அவர்களை தடுப்பு காவலில் கைது செய்தேன் என்றால் சரிதான், ஆனால் மறியல் செய்ததால் தான் கைது செய்தேனா என்று வழக்கு கோப்பை பார்த்தால் தான் தெரியும். நான் எதற்காக எதிரிகளை நீதிமன்றத்திற்கு கொண்டு வந்தேன் என்றால் நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள குற்ற எண்.816/2001 சட்டப்பிரிவுகள் 143, 341, 188 இதச உ/இ 7(1A) CLA Act சம்பந்தப்பட்ட வழக்கில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த கொண்டு வந்தேன். அன்றைய தினத்தில் இதர காவல் நிலையங்கள் மூலமாக கைது செய்யப்பட்ட தி.மு.க கட்சியை சேர்ந்தவர்கள் மதுரை மாவட்ட நீதிமன்ற வளாகத்திற்கு

கொண்டு வரப்பட்டார்களா என்றால் வந்திருக்கலாம். அன்றைய தினத்தில் தி.முகவினர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்பட்ட காரணத்தினால் துணை ஆணையர் திரு.அமல்ராஜ் அவர்கள் தலைமையில் சுமார் 500 ற்கும் மேற்பட்ட ரிசர்வ் போலிசார் நீதிமன்ற வளாக பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டார்கள் என்றால் சரியல்ல. அன்றைய தினத்தில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்பட்ட தி.முக.வினரை பார்க்க வந்த பொதுமக்கள் துணை ஆணையர் திரு.அமல்ராஜ் அவர்களிடத்தில் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்களா என்றால் சரியல்ல. பொதுவாக கூட்டத்திலிருந்து மக்களை கலைக்க லத்தி சார்ஜ் செய்யும் போது மக்கள் கலைந்து ஓடும் போது ஏற்படும் தள்ளுமுள்ளுவில் காயங்களும் பொருட்களுக்கு சேதமும் ஏற்படுவது இயல்பான ஒன்றா என்றால் நடக்கலாம். கைது செய்யப்பட்ட திமுகவினர் அனைவரும் நீதிமன்ற வளாகத்தில் அமைந்துள்ள நடுப்பகுதியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தார்கள் என்றால் இல்லை, நான் நீதின்றத்திற்கு கொண்டு வந்த எதிரிகள் என்னுடைய பாதுகாப்பில் தான் இருந்தார்கள். எங்களது பாதுகாப்பில் இருந்த எதிரிகளை யாரும் நெருங்கா வண்ணம் தக்க பாதுகாப்புடன் தான் வைத்திருந்தேன் என்றால் சம்பவத்திற்கு பின்பு தான் அவர்கள் எனது பாதுகாப்பில் இருந்தார்கள். சம்பவத்திற்கு முன்பும் எதிரிகள் எங்கள் பாதுகாப்பில் தான் இருந்தார்கள். எதிரிகளை நீதிமன்றத்திற்கு அழைத்து வரும் போது நானும் எனது காவல் நிலைய ஆய்வாளர்கள் இருவர் மற்றும் சில காவலர்கள் வந்தார்கள். எதிரிகள் எங்கள் பாதுகாப்பில் இருந்த போது, அவர்களை வெளிநபர்கள் யாரும் நெருங்கிவிடாதபடியும், அவர்களிடம் எந்த பொருளும் கொடுத்துவிடாதபடியும் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டியது எனது கடமை என்றும், அது போல் தான் அவர்களை நாங்கள் வைத்திருந்தோம் என்றால் சரிதான். நான் காவல் ஆய்வாளர் விசாரணையின் போது எதிரிகளை அழைத்துக்கொண்டு நீதிமன்றத்திற்கு வந்த போது, திடீரென்று மேற்கண்ட எதிரிகள் அருகில் கிடந்த கற்களை எடுத்து எறிந்ததில் நீதிமன்ற ஜன்னல்

கண்ணாடி உடைந்த விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு சொல்லவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட அனைத்து எதிரிகளையும் நானும் என்னுடைய போலிஸ் பார்ட்டிகளும் அடித்தோம் என்றால் சரியல்ல. நான் எதிரிகள் மீது குறைந்த பலத்தை பிரயோகத்தை பயன்படுத்தினேனா என்றால் பயன்படுத்தினேன், ஆனால் எந்த ஆயுதமும் லத்தியும் பயன்படுத்தவில்லை. நான் காவல் ஆய்வாளரின் விசாரணையின் போது எவ்வாறு குறைந்த பலத்தை பயன்படுத்தினேன் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் வேண்டுமென்றே திட்டமிட்டு எதிரிகளை தாக்கி காயப்படுத்தினேன் என்று சொன்னால் சரியல்ல. காவல் துணை ஆணையர் தடியடி நடத்திய போது பொதுமக்கள் மற்றும் நீதிமன்ற வாய்தாவிற்கு வந்த நபர்கள் தப்பி ஓடிய போது ஏற்பட்ட சேதத்தை கணக்கில் கொண்டு நான் எதிரிகளுக்கு ஏற்படுத்திய காயத்தின் காரணமாக என் மீது வழக்கு ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக எதிரிகள் மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கு சம்பந்தமாக எதிரிகளை கைது செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக நான் தனி அறிக்கை காவல் நிலையத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், அண்ணாநகர் காவல் நிலைய ஆய்வாளர் வானமாமலை மேற்படி சம்பவயிடத்தில் நேரடியாக இருந்தால் நான் தனியாக தாக்கல் செய்யவில்லை. காவல் நிலையத்தை விட்டு நான் வெளியில் பணியில் இருக்கும் போது குற்ற நிகழ்வு நடந்தால் அது சம்பந்தமாக நான் தனி அறிக்கை காவல் நிலையத்தில் தாக்கல் செய்ய வேண்டுமென்றால் நான் தனி அறிக்கை சமர்ப்பித்திருக்கலாம், ஆனால் எனக்கு ஞாபகமில்லை. நான் சொன்ன மாதிரி எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், எனவே தான் இந்த வழக்கு சம்பந்தமாக எந்த தனி அறிக்கையும் வழக்கு கோப்பில் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு திடீர் நகர் சட்டம் ஒழுங்கு உதவி ஆணையர் அவர்கள் தான்

உயர் அதிகாரி ஆவார். மேற்படி உயர் அதிகாரியை விசாரித்தால் நான் தனி அறிக்கை தாக்கல் செய்துள்ளேனா என்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான். என்னுடைய தகவல் தான் இந்த வழக்கில் முதல் தகவலாக இருக்க வேண்டும் என்றாலும் அவ்வாறு எனது தனி அறிக்கை அடிப்படையில் இந்த வழக்கு பதிவு செய்யப்படாததால் இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நீதிமன்ற நடுப்பகுதியில் அமைந்துள்ள வளாகத்தில் கற்கள் இல்லாததால் இந்த சம்பவம் நடைபெற்றிருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றும் என்னை வழக்கிலிருந்து காப்பாற்றிக்கொள்வதற்காக எதிரிகள் மீது பொய் வழக்கு தாக்கல் செய்து அதில் நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –** இல்லை.